# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in**


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மறு ஆய்வு மனு எண் 2/2016**

திரு. அர. ஏழுமலை,
த/பெ. அ. ரங்கசாமி,
கன்னியம்மன் கோயில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர்,
காஞ்சிபுரம் மாவட்டம் – 603 209

மேல் முறையீட்டாளர்
(திரு. அர. ஏழுமலை)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு
செங்கல்பட்டு – 603 001

எதிர்மனுதாரர்
(R. தேசஅபிமானன்
(செயற் பொறியாளர்//மறைமலை நகர்)

**கேட்புரை நாள்: 19–8–2016**

**ஆணை நாள் : 12–9–2016**

திரு. அர. ஏழுமலை, மேட்டுக்காடு, சட்ட மங்கலம் கிராமம் அவர்களின் மேல்முறையீட்டு மனு எண் 102/2015ற்கான மின்குறை தீர்ப்பாளரின் 18.4.2016 நாளிட்ட ஆணையை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சமர்பித்துள்ள 20.5.2016 நாளிட்ட மனு, மறு ஆய்வு மனு எண் 2/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது 19/8/2016 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது மேல்முறையீட்டாளரின் மறுபரிசீலனை கோரும் மனுவிலுள்ள வாதங்கள், கேட்புரையின் பொழுது இருதரப்பினராலும்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மனுதாரரின் கோரிக்கை:**

திரு. அர. ஏழுமலை அவரின் மேல்முறையீட்டு மனு எண் 102/2015 க்கு மின்குறைதீர்ப்பாளரால் வழங்கப்பட்ட ஆணையை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. மனுதாரரின் மறு ஆய்வு கோரும் மனுவிலுள்ள வாதங்கள் :**

1. சென்ற 19/12/2015 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவிற்கு 10/03/2016ல் விசாரணை செய்யப்பட்டு அதற்கு பதில் கிடைத்திட்ட ஆணை நாள் 18/04/2016 தீர்வில் தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமறை விதிகளின் 17இல் குறிப்பிட்டுள்ளபடி எனது கடித மனு ஆலோசனை கடிதம் என்றாலும் அதற்கு பொறியாளர் பதில் அளித்திட கூடாது என்று தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமறை விதிகளின் எண் – 17ல் குறிப்பிடவில்லை என்பதால் அதற்குரிய தீர்வு தேவையாகும்.
2. மேலும் கிடைக்கப்பட்ட தங்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒரே சர்வே எண்ணில் கொடுக்கப்பட்ட மின்இணைப்பிற்கு மூன்றுமுறை மனுசெய்து வழங்கப்பட்ட தீர்வுகளில் பொறியாளர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடியான கூட்டுபட்டா இடத்திற்கு மற்றவர்களின் ஒப்புதல் பெறவேண்டும் என குறிப்பிட்டுள்ளபடி பாகப்பரிவினை செய்யாத பட்சத்தில் மற்றநபர்களிடம் இருந்து ஆட்சேபனை கடிதம் பெறவில்லை. கிராம அலுவலர் சான்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அளிக்கலாம் என்று மின்வழங்கல் சட்டபடி உள்ளது என்பதற்கு அதன் குறிப்புகள் கிடைத்திடவில்லை.
3. கிராம நிருவாக அலுவலர் சான்று மட்டும் வைத்து மின்இணைப்பு வழங்கிடுவதில்லை என்றும், கிராம நிருவாக அலுவலர் சான்றில் நான்குபுற எல்லைகள் குறிப்பிடவில்லை என்றாலும் மின்இணைப்பு வழங்கப்படும் எனகுறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு குறிப்பிட்டுள்ள பொறியாளர்கள் கிராம நிருவாக அலுவலர் சான்றுக்கு முக்கியத்துவம் அளித்து மின் இணைப்பு அளித்திட்டுள்ளார்கள்.
4. ஒரு இடத்திற்கு பட்டா, சர்வே எண் ஆகியவை மின்வாரியத்திற்கு சாத்தியமாகாது வருவாய்துறைக்கு மட்டுமே சாத்தியமாகும் என்கிறபடி, பத்திரபதிவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணும், வரிரசீதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணும் ஒரே எண்ணினை

குறிப்பிட்டபோதும் அச்சர்வே எண்ணினை முன்வைத்து வட்டாட்சியர்க்கு பரிந்துரை செய்யும் கிராம நிருவாக அலுவலர் வரிரசீதை முன்வைத்து அளித்திட்ட சான்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு சர்வே எண் மாற்றி எழுதி தந்திட்டதை ஏற்றுக்கொள்ளலாம் என எந்த சட்டவிதிமுறையில் குறிப்பிட்டுள்ளது என குறிப்புகள் கிடைத்திடவில்லை.

5. விண்ணப்பத்துடன் இணைத்து பெறப்படும் ஆவணத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் தகராறு எழுந்து விசாரணை என்று தங்களிடம் வந்தபிறகு விண்ணப்பத்துடன் இணைக்காத ஆவணங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்கிடலாம் என எந்த சட்டவிதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதற்கான குறிப்பினை தாங்கள் அளித்து உதவிட வேண்டும்.

6. அண்ணன் தம்பி பாகபிரிவினை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழங்கிய தீர்ப்பாணையில் இருவருக்கும் அனைத்து சொத்துக்களிலும் சரிபாதிபாகம் என தீர்ப்பளித்து வழங்கப்பட்ட தீர்ப்பாணை நகலுடன் அவ்விடத்தில் வசிப்பதற்கான சான்றுகள் இணைக்கப்பட்டு மின் இணைப்புக்கு விண்ணப்பித்திட்ட மறைமலைநகர் கோட்டம் காட்டாங்குளத்தூர் பிரிவு அலுவலகத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை விதிதொகுப்பில் 27/3ல் குறிப்பு அதில் குறிப்பிட்டுள்ளபடி ஒப்புதல் தரவில்லை. 27/4ல் உள்ளபடி மின்னிணைப்பு 3ல் 6ற்கான படிவத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை முத்திரைதாளில் அச்சிட்டு இணைத்தும், பாகபிரிவினைக்கு பின் நகல்களை சமர்ப்பிப்பதற்கு உத்தரவாத பத்திரம் அளித்திட்ட பின்னரும் படித்து பார்த்திடாமல் உயர்பொறியாளர் அனுமதி பெறவேண்டும் என காலம் கடத்தியும், நீதிமன்ற தீர்ப்பானையினை ஆய்வுசெய்ய அரசுவாதுரைஞர் (Govt pleader) பரிந்துரை கடிதம் தேவையென்று கூறி பெற்று அளித்திட்ட பின்னரும் மின் இணைப்பு வழங்கப் படவில்லை. அவ்விடத்தின் உரிமையாளர் என நீதிமன்றம் சுட்டிகாண்பித்திட்ட போதிலும், அதனை ஆய்வுசெய்து வழங்கிட அரசுவாதுரைஞர் (Govtpleader) பரிந்துரை கடிதமும், தேவைபட்டால் தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் தனி சட்டப் பிரிவுக்கு ஆய்வுசெய்ய வேண்டிவரும் என கூறிடும் பொறியாளர்கள் பணியாற்றிடும் மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்தில் வெவ்வேறு விதிமுறைகளை பின்பற்றிடுவதால் என்னுடைய மனுக்களுக்கு பதில் அளித்த மின்பொறியாளர்கள் அளித்திட்ட கடிதபதிலில் குறிப்பிட்டுள்ளபடி மின்இணைப்புக்கு பெறப்பட்ட எந்த ஒரு ஆவணங்களையும் ஆய்வுக்கும் அனுப்பிடாமல் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

7. ஒருசர்வே எண்ணிற்கு பலசான்றுகளும், ஆவணங்களும் உள்ள இடத்திற்கு ஒருசான்றில் சர்வேஎண் – 258/12ல் 17ல் ஒருபங்கு என்றும், மற்றொரு சான்றில் சர்வேஎண்–258/12ல் 0.3 செண்ட் என்றும், ஒருவர் பத்திரபதிவில் சர்வேஎண்–258/12ல் மொத்தவிஸ்தீரணம் குறிப்பிட்டு அதில் பிரிக்கபடும் பாகம் மட்டும் ஒருவருக்கு உரிமையானது என்றும், குறிப்பிட்டுள்ளது. குறிப்பிட்டுள்ள சான்றுகளிலும், பத்திரபதிவிலும் ஒரே சர்வேஎண் குறிப்பிட்டுள்ளது. அதேபோன்று வழங்கிய வரிரசீதிலும் சர்வேஎண்–258/12ல் என தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சான்று வழங்கிடுவதற்கு அதிகாரம் இல்லாத கிராம நிருவாக அலுவலர் அளிக்கப்பட்ட சான்றில் 258/12பி என குறிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டதும், பொறியாளர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி உரிய ஆய்வுக்கு அனுப்பிடாததும், மின் இணைப்பு வழங்கிய பின்னர் அளிக்கப்பட்ட ஆவணங்களை ஏற்றுக்கொண்டதும், சட்டவிதிமுறையில் காணப்படாத வழங்கிய தங்களின் தீர்வானது.
8. மேற்குறிப்பிட்டுள்ளபடி நீதிபதியின் தீர்ப்பானையினை ஆய்வுசெய்யவே ஒரு அரசுவாதுரைஞரின் பரிந்துரை கடிதம் தேவைப்படும்போது என்னுடைய கடித மனுக்களுக்கு உரிய ஆய்வுக்கு அனுப்பிடாமல் கிடைக்கபட்ட தீர்வுகளை மீண்டும் மறுஆய்வு செய்து தீர்வு வழங்கிடவேண்டியும், எந்த ஒரு கடிதமனுவிற்கும் பதில் அளிக்ககூடாது என்று தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமறை விதிகளில் எண் –17ல் குறிப்பிடவில்லை அவ்வாறு குறிப்பிடாதபட்சத்தில் தாங்கள் வழங்கிய தீர்வினை மறுஆய்வு செய்து தங்களின் தீர்வானது கிடைத்திட வேண்டும்.

**3. <u>மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>**

3.1 மறு ஆய்வு மனு செய்துள்ள மேல் முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 19–8–2016 அன்று மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

3.2 மறு ஆய்வு கோரும் மனு செய்துள்ள அர. ஏழுமலை கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

3.3 எதிர்மனுதாரரது சார்பில் திரு. R. தேச அபிமானன், செயற்பொறிபாளர், மறைமலை நகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை வலியுறுத்தினார்.

**4. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள் :</u>**

4.1 மேல்முறையீட்டாளர் திரு. ஏழுமலை அவர்கள் தன்னுடைய மறு ஆய்வு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

4.2 திரு. ஏழுமலை அவர்கள், அவருடைய 6.4.2013 நாளிட்ட கடிதத்திற்கு சம்பந்தப்பட்ட பொறியாளர் பதில் எதுவும் தரவில்லை அந்த கடிதத்திற்கு பதில் தரவில்லை என்பதால், தனக்கு தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திற செந்தாரங்களுக்கான ஒழுங்குமறை விதி எண் 17ன்படி ஈட்டுத்தொகை தரப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

4.3 மேலும், அவருடைய கடிதம் ஆலோசனை கடிதம் என்று எடுத்துக் கொண்டாலும், அதற்கு பொறியாளர் பதில் அளித்திடக் கூடாது என்று தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல்திறச் செந்தாரங்களுக்கான ஒழுங்குமறை விதி எண் 17ல் குறிப்பிடவில்லை என்பதால், தனக்கு ஈட்டுத்தொகை தரப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

4.4 மேலும் அவருடைய கடிதத்தில் சர்வே எண் 258/12ல் புதிதாக வீடு, வணிகம், கட்டுமான பணி, சிறுதொழில்கள் போன்ற பணிகள் தொடங்குவதற்கு மின் இணைப்பு கொடுத்திடுவதை தடுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அது ஆட்சேபனை கடிதம் என்று எடுத்துக் கொள்ள பட வேண்டும் என்றும் எனவே, கடிதத்திற்கு பதில் தர வேண்டியது, உரிமம்தாரரின் கடமை என்றும் வாதிட்டு, எனவே, தீர்வை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரினார்.

**5. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

5.1 திரு. தேச அபிமானன், செயற்பொறியாளர், மறைமலை நகர் அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.2 செயற் பொறியாளர் அவர்கள் மேற்கண்ட கடிதத்தில் திரு. அர. ஏழுமலை அவர்கள் இது நாள்வரை பாகப்பிரிவினை செய்யப்படாத காரணத்தால் அந்த இடத்தின் பத்திரத்தை முழு ஆய்வு செய்து அதன்பின் மின் இணைப்பை கொடுப்பதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளதால். அது ஆலோசனை கடிதமாகத்தான் உள்ளது என்றும், ஆலோசனைக்கடிதம் என்பதால், அதற்கு பதில் தரவில்லை என்பதால், ஈட்டுத் தொகை வழங்க தேவையில்லை என்றும் வாதாடினார்.

**6. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

6.1 இந்த மறு ஆய்வு கோரும் மனுவில், மேல்முறையீட்டாளர் மறு ஆய்வு கோரும் மேல்முறையீட்டு எண்.102/2015ல் உள்ள கோரிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

“தமிழ்நாடு மின்பகிர்மானச் செயல் திற செந்தாரங்களுக்கான ஒழுங்குமறை விதிகளில் குறிப்பிட்டுள்ள படி மனுவிற்கு பதில் அளித்திடாததற்கும் குறைதீர்க்கும் மன்றத்தில்

முறையிட்டும் உரிய பதில் கிடைத்திடாததற்கும் இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள நகல்களை பார்வையிட்டு தங்களின் தீர்வு கிடைக்க வேண்டும். ''

**6.2** ஆனால் அவருடைய மறு ஆய்வு கோரும் மனுவில், மேற்கண்ட கோரிக்கைக்கு சம்பந்தமற்ற மற்ற தகவல்களையும் வாதங்களையும் முன்வைத்துள்ளார். ஒரு மேல் முறையீட்டு மனுவின் மீதான ஆணைக்கு மறு ஆய்வு கோருவது, அந்த மேல்முறையீட்டில் சம்பந்தபட்டுள்ள கோரிக்கைக்கு மட்டுமே, என்பதால், திரு. ஏழுமலை அவர்களின் மறு ஆய்வு மனுவிலுள்ள மற்ற தகவல்களும், வாதங்களும் என்னால் தீர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**6.3** இந்த மனுதாரர், தன்னுடைய **6.4.2013** கடிதம் ஆலோசனை கடிதம் அல்ல, அது ஒரு ஆட்சேபனை கடிதம் என்பதால் அதற்கு உரிமம்தாரர் பதில் தரவில்லை என்பது தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திற செந்தரங்களுக்கான விதிகளின்படி தவறு என்றும், எனவே, ஈட்டுத் தொகை அவருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

**6.4** மேலும், அது ஆலோசனை கடிதமாக எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல் திற செந்தாரங்களுக்கான விதித்தொகுப்பின் விதி **17**ன் படி அதற்கு பொறியாளர் பதில் அளிக்க வேண்டியது இல்லை என்று விதிகளில் தெரிவிக்கப்படவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**6.5** எதிர்மனுதாரர், அது ஒரு ஆலோசனை கடிதம் என்பதாலும், சர்வே எண்ணில் **258/2**இல் **17** பேருக்கு பாகம் உள்ளது பாகபிரிவினை ஏற்படவில்லை என்ற தகவலையும் தெரிவிப்பதாக உள்ளதாலும் பத்திரத்தை முழுமையாக ஆய்வு செய்து மின்இணைப்பு கொடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அது ஆலோசனை கடிதம் தான், எனவே அதற்கு பதில் தேவையில்லை என்றும், ஈட்டுத்தொகை உரிமம்தாரர் தர வேண்டும் என்று கோருவதும் விதிகளுக்கு முரண்பாடானது என்று வாதிட்டுள்ளார்.

**6.6** இந்த மேல் முறையீட்டாளர், தமிழ்நாடு மின் சாரப் பகிர்மானச் செயல் திற செந்தாரங்களுக்கான விதித்தொகுப்பின் விதி **17**ஐ சுட்டிக்காட்டி, பொறியாளர் பதில் அளித்திட கூடாது என்று தெரிவிக்கவில்லை என்று வாதிட்டுள்ளதால் அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"17. Responding to Consumer's Complaint***

*If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply, the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter."*

**6.7** மேற்கண்ட விதியின்படி, ஒரு நுகர்வோரின் எழுத்து வடிவில் சமர்பிக்கப்பட்ட முறையீட்டிற்கு சம்பந்தப்பட்ட பகுதிப் பொறியாளர் 10 நாட்களுக்குள் பதில் தெரிவிக்க வேண்டும் என்றும் விரிவான பதில் அளிப்பதற்கு இடத்தை பார்வையிட வேண்டும் என்ற நிலை அல்லது பிற அலுவலரிடம் கலந்தாய்வு செய்ய வேண்டிய நிலையில் நுகர்வோருக்கு ஏன் பதில் அளிக்கமுடியவில்லை என்பதை விளக்க வேண்டும். மேலும், அந்த முறையீட்டை கையாளும் அலுவலரின் பெயர், முகவரி, தொலைபேசி எண். ஆகியவற்றை தெரிவித்தல் வேண்டும். மேலும், 20 நாட்களுக்குள் பதில் அனுப்பப்பட்டுவிட்டதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் உள்ளது.

**6.8** மேற்கண்ட விதியில் எழுத்து வடிவில் சமர்ப்பிக்கப்பட்ட முறையீடு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் முறையீடு (complaint) என்ற வார்த்தை என்பது மிகவும் முக்கியம் முறையீடு என்பதற்கான விளக்கம் மன்ற விதி 2(f) ல் கொடுக்கப்பட்டுள்ளது அந்த பொருள் விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

*“(ஊ) "முறையீடு" (Complaint) என்பது கீழே சொல்லப்பட்டுள்ள குறை பற்றி ஒரு முறையீட்டாளர் எழுத்து மூலமாக கொடுக்கப்படுவது.*
*(i) உரிமம் பெற்றவரால் அளிக்கப்பட்ட மின்சார வினியோகத்தில் உள்ள குறைபாடு அல்லது குறைவு;*
*(ii) மின் இணைப்பு வழங்குவதில் உரிமம் பெற்றவர் செய்யும் நியாயமற்ற அல்லது கட்டுப்படுத்தப்பட்ட தொழில் பழக்கம்;*
*(iii) மின்சாரம் பயன்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பணிக்கு, ஆணையம் நிர்ணயித்த கட்டணத்தை விட அதிகமாய் கேட்பது;*
*(iv) தற்சமயம் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு எதிராக, பொது வாழ்க்கைக்கு பாதுகாப்பற்றதும் இடர் அளிக்கக்கூடியதுமான மின்சாரப்பணி.”*

6.8 மேற்கண்ட பொருள் விளக்கத்திற்குள், மேல் முறையீட்டாளரின் **6.4.2013** நாளிட்ட மனு வரவில்லை என்பதால், அது முறையீடு என்று எடுத்துக்கொள்ள முடியாது. எனவே, மேற்கண்ட தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திற செந்தாரங்களுக்கான விதி 17, மேல்முறையீட்டாளரின் **6.4.2013** நாளிட்ட மனுவிற்கு பொருந்தாது. எனவே, மேற்கண்ட மனுவிற்கு பதில் தரப்படவில்லை என்பதால் ஈட்டுத் தொகை வழங்க வேண்டும் என்பதும் ஏற்புடையது அல்ல.

**6.9** மேலும், மின் குறைதீர்ப்பாளரின் மேல் முறையீட்டு மனு எண் **102/2015** இன் **18.4.2016** நாளிட்ட ஆணையில், தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திற செந்தாரங்களுக்கான விதி 17, மற்றும், மேல்முறையீட்டாளரின் மனு ஆலோசனை கடிதமா என்பவைகள் பத்தி **9.3** to 9.10 வரை தீர ஆராயப்பட்டுதான் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

**6.10** மின்குறைதீர்ப்பாளரின் ஆணையை மறு ஆய்வு கோரும் மனுக்கள் மின் நுகர்வோர்குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 22(6)ன்படி இருக்க வேண்டும் . அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“மின் குறைதீர்ப்பாளர் தானே முற்பட்டோ அல்லது சம்பந்தப்பட்ட நபர்கள் எல்லா தரப்பினர்களின் விண்ணப்பத்தின் பேரிலோ, முடிவு, பணிப்புரை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுகிற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அத்தகைய முடிவு, பணிப்புரை அல்லது ஆணை ஆகியவை பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றி அறியாமை, அல்லது வெளிப்படையாக தெரியும் பிழைகள் காரணமாய் நிகழ்ந்தது என்ற காரணத்திற்காக அத்தகைய முடிவு, பணிப்புரை அல்லது ஆணையை மறு ஆய்வு செய்யலாம்.*
*(அ) மறு ஆய்விற்கான விண்ணப்பத்தில் மனுதாரரின் பெயர், முகவரி மின்குறைதீர்ப்பாளரின் ஆணை எண்ணும் தேதியும் மற்றும் எந்த அடிப்படையில் மறு ஆய்வு கோரப்படுகிறது அதாவது– பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றிய அறியாமை, வெளிப்படையாய் தெரியும் பிழைகள் காரணமாக நிகழ்ந்தது என்பதை குறிப்பிட வேண்டும்.”*

**6.11** இந்த மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள் அனைத்தும் ஒரு தீர்வை மறு பரிசீலனை செய்ய வேண்டிய காரணங்கள் என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 22(6)–ல் தெரிவித்துள்ள பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றிய அறியாமை மற்றும் வெளிப்படையாக தெரியும் பிழைகள் என்ற காரணங்களாக இல்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.102/2015–ன் தீர்வில் மறு ஆய்வு எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**7. முடிவுரை**

7.1 மனுதாரரின் மறு ஆய்வு கோரும் மனு எண்.2/2016 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 22(6)–ல் கூறப்பட்டுள்ள காரணங்களாக இல்லை என்பதால் மேற்கண்ட மறு ஆய்வு கோரும் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட முடிவுடன் மறு ஆய்வு மனு எண்.2/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. அர. ஏழுமலை,
த/பெ. அ. ரங்கசாமி,
கன்னியம்மன் கோயில் தெரு,
மேட்டுக்காடு, சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம் – 603 209

2) மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு
செங்கல்பட்டு – 603 001.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
NPKRR மாளிகை,
144, அண்ணா சாலை,
சென்னை–600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
19ஏ, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை– 600 008.

5) உதவி இயக்குநர்(கணினி) – **மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
19ஏ, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை– 600 008.